முன்னேற்றுவோம்! www.Padasalai.Net முன்னேறுவோம்!!

# தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு (TNGTF)

(மாநில அமைப்பு)

பதிவு எண் : 198/07 Plot No.28,அன்னார்புரம், நத்தம் சாலை, ரெட்டியபட்டி அஞ்சல், திண்டுக்கல் – 624 003

**TAMILNADU GRADUATE TEACHERS FEDERATION**

No.28. Annarpuram, Natham Road, Reddiyapatti Post, Dindigul – 624 003. Tamilnadu.mail:tngtf2007@gmail.com

| K.தங்கவேலு M.Sc.,B.Ed.,M.Phil., | Dr .P.பேட்ரிக் ரெய்மாண்ட் M.Sc., M.Phil., B.Ed., | திரு S. நாராயணன் M.Sc.,B.Ed.,M.Phil. |
|---|---|---|
| மாநிலத்தலைவர் | பொதுச் செயலாளர் | மாநிலப் பொருளாளர் |
| 98426 03880 | 90427 48530 | 98944 03803 |


Date: 13-11-2024

**பெறுநர்**

1. ***நிதித்துறை செயலாளர்,***
   தலைமைச் செயலகம், சென்னை

2. **முதன்மைச் செயலர் / ஆணையர் கருவூல கணக்கு ஆணையரகம்**
   3வது தளம், ஒருங்கிணைந்த நிதி துறை அலுவலக வளாகம்,
   கால்நடை மருத்துவமனை வளாகம் ,
   571.அண்ணா சாலை, நந்தனம்,
   சென்னை -600 035

மதிப்புமிகு அய்யா

**பொருள்**: பங்களிப்பு ஓய்வூதிய திட்டம்(CPS) இல் ஓய்வு பெறும் அனைத்துவகை அரசு/அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு, கல்வி ஆண்டின் கடைசி நாள் வரை மறு நியமனம்(Re-employment)- செய்யும் போது , **கடைசியாக பெற்ற ஊதியம் முழுவதையும் வழங்கும் நடைமுறையை பின்பற்றி ஊதியம் வழங்க ஆணை பிறப்பிக்க ஆவன செய்ய கேட்டுக் கொள்ளுதல் சார்பாக-**

**பார்வை**:

1. **அரசாணை எண் 170,** பள்ளிக்கல்வித்(பக5(2)) துறை, நாள் 23-1 2014.
2. **அரசாணை எண் 115**, பள்ளிக்கல்வித்(பக5(2))துறை,நாள்28.062022
3. **அரசாணை எண் 16,** நிதித்துறை, நாள் 28-01-2020

www.Padasalai.Net

அனைத்து வகை அரசு /அரசு உதவி பெறும் தொடக்க/நடுநிலை, உயர்நிலை/மேனிலைப்பள்ளிகளிலும் அரசு பணியில் நியமிக்கப்பட்டு, தற்போது வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு **பார்வை 1, மற்றும் 2 இன் படி மாணவர்களின் கல்வி நலன் கருதி, கல்வி ஆண்டின் கடைசி நாள்( Up to the end of Academic Session) வரை தேவைப்படும் ஆசிரியர்கள் மறு நியமனம் செய்ய அரசால் அனுமதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

மேலும் பார்வை 1 இல் மேற்குறிப்பிட்டுள்ள அரசாணை எண் 170 இல் பத்தி 3 இல் 2003 ஆம் ஆண்டு முதல் அரசு பணியில் சேர்ந்துள்ளவர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதிய திட்டம்( CPS) நடைமுறையில் இருப்பதால்,**2003 ஆம் ஆண்டிற் கு பிறகு பங்களிப்பு ஓய்வூதிய திட்டம்( CPS) இன் கீழ் ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு மறுநியமனம் அளிக்கும்போது ஓய்வு பெறுவதற்கு முன்னர் அவர்கள் கடைசியாக பெற்ற ஊதியமே மறுநியமன காலத்திற்கு ஊதியமாக வழங்க வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது**

பங்களிப்பு ஓய்வூதிய திட்டம்( CPS) இன் கீழ் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு மறுநியமனம் வழங்கும்போது , ஓய்வு பெறுவதற்க்கு முன் ஆசிரியர்கள் கடைசியாக பெற்ற ஊதியமே மறு நியமன காலத்திற்க்கும் CPS பிடித்தம் இன்றி பெரும்பாலான சார்நிலைக்கருவூலக அலுவலர்கள்/ஊதியம் பெற்று வழங்கும் அலுவலர்கள் ஊதியம் அனுமதித்து வருகிறார்கள். ஆனால் ஒரு சில சார்நிலைக்கருவூலக அலுவலர்கள்/ஊதியம் பெற்று வழங்கும் அலுவலர்கள் **மேற்சொன்ன 28-01-2020 நாளிட்ட நிதித்துறை அரசாணை எண் 16 இல் பத்தி 3 ஐ குறிப்பிட்டு மறு நியமனம் பெற்றுள்ள ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதற்க்கு முன் கடைசியாக பெற்ற ஊதியம்** "Last Pay Drawn minus [Employer (+)Employee Contribution as fixed by the Government time to time" என உள்ளதை தங்களின் சுய மொழியாக்கம்(Self Interpretation) இன் அடிப்படையில் மறுநியமனம்பெற்றுள்ள ஆசிரியர்கள், ஓய்வுக்கு மூன்று கடைசியாக பெற்ற ஊதியத்திலிருந்து 20% (10% +10%) பிடித்தம் செய்து அரசு கணக்கில் வரவு வைத்து வருகிறார்கள். மறுநியமனம் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு 20% குறைவாக ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

***பார்வை 3 இல் குறிப்பிடப்பட்டுள்ல அரசாணை 16, நிதித்துறை, நாள் 28-01-2020 என்பது கொரோனா நோய் தொற்று காலத்தில் புதிய பணியிடங்கள் நிரப்பப்படாததால், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் காலிப்பணியிடங்கள் மற்றும் புதிய பணியிடங்களில் நியமிக்கப்பட வேண்டிய நிலை***

www.Padasalai.Net

***ஏற்பட்ட போது, அவ்வாறு நியமிக்கப்படும் அரசு ஊழியர்களுக்கு மறு பணி நியமன கால்த்தில் ஊதிய நிர்ணயம் செய்வது குறித்த அரசின் தெளிவுரையாகும். இந்த அரசாணையில் ஆசிரியர்கள் குறித்து எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை,இந்த அரசாணைஆசிரியர்களுக்கு எவ்வித்த்திலும் பொருந்தாது. இது ஓய்வு பெற்று அரசு ஊழியர் மீண்டும் பணி நிர்ணயம் செய்யும் போது கடைபிடிக்கப்பட வேண்டிய நடைமுறையாகும்***

இவ்வாறு கருவூல அலுவலர்கள் அரசாணையை தெளிவாக புரிந்து கொள்ளாமல் தங்கள் விருப்பப்படி விளக்கமளித்து **ஊதிய பட்டியலை ஏற்க மறுப்பதால் பல்வேறு மாவட்டங்களில் ஆசிரியர்களுக்கு 20% ஊதியம் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது .இது முற்றிலும் தவறான நடைமுறையாகும், பார்வை 3 ல் காட்டப்பட்டுள்ள அரசாணை ஆசிரியர்களுக்கு பொருந்தாது** அது ஓய்வு பெற்றதற்கு பிறகு கொரோனா காலத்தில் நியமனம் செய்யப்பட்ட அரசு ஊழியர்களுக்கு மட்டுமே பொருந்தும்

பங்களிப்பு ஓய்வூதிய திட்டம்( CPS) இன் கீழ் ஓய்வு பெற்று மறுநியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள்/அலுவலர்களுக்கும் பழைய ஓய்வூதிய திட்டம்( OLD PENSION SCHEME) இன் கீழ் ஓய்வு பெற்று மறுநியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள்/அலுவலர்களுக்கு ஓய்வுக்கு முன்னர் கடைசியாக பெற்ற ஊதியம் முழுவதையும்( பிடித்தம் இன்றி) வழங்கும் நடைமுறையையே பின்பற்ற ஆணை பிறப்பிக்க வேண்டும் என வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம். ஆகவே அரசு மேற்காணும் பொருள் சார்ந்து ஆழ்ந்து பரிசீலித்து தவறாக ஊதியப் பிடித்தம் செய்துள்ள கருவூல அலுவலர்கள் அந்தத் தொகையை மீண்டும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கும், இனி வரும் காலங்களில் இது போன்ற நிகழ்வுகள் ஏற்படாத வகையில் உரிய தெளிவுரை வழங்கவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்

தங்கள் உண்மையுள்ள,

இடம்: திண்டுக்கல்

நாள்:13–11–2024

**பீ.பேட்ரிக் ரெய்மாண்ட்**
(பொதுச்செயலாளர்)

இணைப்பு: பார்வை 1,2,3 இல் உள்ள அரசாணைகள்